பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 26 ஞாயிற்றுக்கிழமை (11.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 105

# தமிழக மீனவரை இலங்கைக் கடற்படை தாக்குவதை கண்டித்து நாளை சென்னையில் தி.மு.க. ஆர்ப்பாட்டம்

## மாநில மீன்பிடி அமைச்சர் தலைமை வகிப்பார்

சென்னை,மார்ச்11

**பாக்குநீரிணையில் வைத்துத் தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி அவர்களைக் கொன்றும், தாக்கியும் வரும் இலங்கைக் கடற்படையினரின் அட்டகாசத்தைக் கண்டித்து, தமிழகத்தின் ஆளுங் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.**

நாளை திங்கட்கிழமை, சென்னையில் உள்ள இலங்கையின் பிரதித் தூதரகத்தின் முன்னாள் நடத்தப்படவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு தமிழக மீன்பிடித்துறை அமைச்சர் கே.பி.பி. சாமி தலைமை வகிப்பார். மின்சக்தித்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமியும் கண்டன ஊர்வலத்தில் பங்கு பற்றுவார்.

பாக்குநீரிணைக் கடற்பிரதேசத்தில் தொழில்செய்யும் தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திக் கொலை செய்வதும், தாக்குதல் நடத்திக் காயமுறச் செய்வதும் அவர்கள் வைத்திருக்கும் மீன் மற்றும் கடல் வளங்களை பறித்தெடுப்பதுமாக -

இலங்கைக் கடற்படையினர் அண்மைக் காலமாகப் பெரும் அட்டகாசம் புரிந்து வருகின்றனர்.

நேற்றும் கூட கச்சதீவுப் பகுதியில் வைத்து தமிழக மீனவர் ஒருவரை அவர்கள் சுட்டுக் கொன்றனர்; தாக்குதலில் மூவர் காயமடைந்தனர்.

பெப்ரவரி மாதத்தில் தமிழக மீனவர்கள் பல தடவைகள் தாக்கிக் காயப்படுத்தியும் சுட்டும் கொன்றது இலங்கைக் கடற்படை.

மார்ச் மாதத்தின் முதல் வாரத்தில் மட்டும் இலங்கைக் கடற்படை நான்கு தடவைகள் அத்துமீறி நடந்ததாக தமிழக முதல்வர் கருணாநிதி சுட்டிக்காட்டியிருந்தார்.

இது விடயத்தைப் பிரதமர் மன்மோகன் சிங் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தும் இலங்கைக் கடற்படையினரின் கொடுமை தொடர்வதாக அவர் சலிப்படைந்து கருத்துத் தெரிவித்தார்.

''இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்தும் தாக்குதல்

(03 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டபம் அருகே நேற்றுக்காலை குண்டுவெடிப்பு; மீனவர் காயம்

சென்னை,மார்ச்11

இராமநாதபுரம் மாவட்டத்தில் உச்சுப் புளிக்கும் மண்டபத்துக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் நேற்றுக்காலை 5 மணியளவில் மிதந்துவந்த பொருள் ஒன்று வெடித்ததில் இரு மீனவர்கள் காயமடைந்தனர்.

தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்கள், கடலில் மிதந்துவந்த பொருள் ஒன்றை எடுத்தனர் என்றும் -

அது பயங்கர சத்தத்துடன் வெடித்தது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதில் படுகாயமடைந்த கார்த்திக் என்பவர் இராமநாதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (அ-1)

## சரணாலயத் தாக்குதல்; 8 பேரின் சடலங்களும் அடையாளம் காணப்பட்டன

கொழும்பு,மார்ச்11

வில்பத்துச் சரணாலயத் தாக்குதலில் கொலையுண்ட இரண்டு இராணுவ உயர் அதிகாரிகளினதும் ஏனைய அறுவரினதும் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை

(03 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு உதவுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

### தமிழக பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

சென்னை, மார்ச் 11

விடுதலைப் புலிகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவே பணம் மற்றும் பொருள்களை உதவி செய்பவர்கள் மற்றும் சட்டவிரோதமாக ஆதரவு கொடுப்பவர்கள் மீது பாரபட்சமின்றிக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழக காவல்துறை பிரதிப் பொலிஸ்மா அதிபர் டி.முகர்ஜி மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எந்தவொரு அரசியல் கட்சி மற்றும் தனி இயக்கங்களைச் சேர்ந்தவர்களாயினும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஆயுதங்களைக் கடத்தியது தொடர்பாக 16 இலங்கைத் தமிழர்கள் உட்பட 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அண்மைக் காலமாக நிலவிவரும் பதற்றமான சூழ்நிலையில் தமிழகக் காவல்துறையினர் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியும், கடலோர மாவட்டங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தியும் தமிழ்நாடு கடலோரப் பாதுகாப்புக் குழுமம், இந்தியக் கடற்படை, கடலோரப் பாதுகாப்பு படை மற்றும் மத்திய உளவுப் பிரிவு ஆகியவற்றோடு ஒருங்கிணைந்து தமிழ்த் தீவிர

(03 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடைச் சிறைச்சாலையில் 42 தமிழ்க்கைதிகள் உண்ணாவிரதம்

கொழும்பு,மார்ச்11

வெலிக்கடைச் சிறைச்சாலையில் விசாரணையின்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள 42 தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுக்காலை ஆரம்பித்தனர்.

தமது கைதுகள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்தவேண்டும். தமக்குரிய விசாரணைகளை கைதுசெய்யப்பட்ட மாவட்டங்களிலேயே நடத்தவேண்டும் என்ற பிரதான கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பில் விசாரணைகளை நடத்துவதற்கு சாட்சிகள் வரமுடியாது என்பதைக் காரணம் காட்டியே விசாரணைகள் இழுத்தடிக்கப்படுகின்றன எனக் கைதிகள் குற்றஞ்சாட்டினர். தமது கோரிக்கைகளை நீதி அமைச்சரும் சட்டமா அதிபரும் நிறைவேற்றுவதாக உறுதியளித்தால் மட்டுமே தாம் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுவர் என அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை எதுவுமின்றி புதிய மகசின் சிறைச்சாலையில் 2004ஆம் ஆண்டு தொடக்கம் தடுத்து வைக்கப்பட்டுள்ள 21 தமிழ் இளைஞர்கள் கடந்த மாதம் இறுதி வாரத்தில் உண்ணாவிரதமிருந்தது தெரிந்ததே. நீதி அமைச்சர் டிலான் பெரேரா அவர்கள் மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்ததைத் தொடர்ந்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டிருந்தது. (அ-12-203)

## தமிழர்களை அவலத்துக்குள் தள்ளினால் அதன் விளைவுகளை தெற்கிலும் உணரநேரிடும்

### விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் எச்சரிக்கிறார்

கிளிநொச்சி,மார்ச்11

தமிழப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களை மனிதப் பேரவலத்துக்குள் தள்ளும் இலங்கை அரசாங்கம், அதற்குரிய விளைவுகளை தென்பகுதியில் உணர நேரிடும்.

இவ்வாறு எச்சரித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன்.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைப் பகுதிகளில் நடைபெற்று வரும் மோதல்கள், மக்களின் இடம்பெயர்வுகள் குறித்து இணையத்தளம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

அவர் இது குறித்து மேலும் கூறியிருப்பதாவது: -

(03 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கையர்களை ஆஸிக்கு ஏற்றிச்சென்ற

## இந்தோனேஷியர்கள் இருவரும் கைதாகி விளக்கமறியலில்

சிட்னி,மார்ச்11

இலங்கையைச் சேர்ந்த 83 தமிழர்களை சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டுவர முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டி, இரண்டு இந்தோனேஷியர்களை ஆஸ்திரேலியப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர். அவர்கள் இப்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையர்கள் தங்கியுள்ள கிறிஸ்மஸ் தீவில் வைத்துக்கைதுசெய்யப்பட்ட 26 வயது மற்றும் 21 வயதான இந்தோனேஷி

(03 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பிலிருந்து மக்கள் நேற்றும் இடம்பெயர்ந்தனர்

கொழும்பு, மார்ச்11

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் தாக்குதல்கள் காரணமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து 4 ஆயிரத்து 198 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 63 பேர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்துசேர்ந்துள்ளனர்.

தேசிய ஊடகத் தகவல் நிலையம் இந்த விவரத்தை நேற்றுத் தெரிவித்தது.

கொக்கட்டிச்சோலை, ஆயித்தியமலை, கொடுவாமடு, தரவைக்குளம், கரடியனாறு, இலுப்படிச்சேனை, களுவாஞ்சிக் குடி ஆகிய இடங்களில் இருந்தே மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை-

(03 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு யோசனைகளை செவ்வாய் சுதந்திரக்கட்சி முன்வைக்கும்

### ஜனாதிபதி நேற்று அறிவிப்பு

கொழும்பு,மார்ச்11

இனப்பிரச்சினைக்கான சர்வகட்சி மாநாட்டுக்கான யோசனைகளை நாளைமறுதினம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சமர்ப்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

புத்திஜீவிகளை நேற்றுக் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாட்டின்மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வைமுன்வைக்க அரசு முழு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்வு தொடர்பான தமது யோசனைகளை முன்வைக்கும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை -

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனைகள் முன்வைக்கப்பட்டபின்னர் ஜாதிக ஹெல உறுமயவின் யோசனை முன்வைக்கப்படும் என்று அந்தக் கட்சியினர் தெரிவித்தனர். (அ-1)

## புலிகளுடன் இரகசிய ஒப்பந்தமா? இல்லை என்று மறுக்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,மார்ச்11

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எதுவித இரகசிய ஒப்பந்தமும் செய்யப்படவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்படிக் கூறியுள்ளார்.

ஜனாதிபதியும் விடுதலைப் புலிகளும் இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்தனர் என்று அரசில் இருந்து வெளியேற்றப்பட்ட மங்கள சமரவீர, ஸ்ரீபதி சூரியாராட்சி ஆகியோர் தெரிவித்துவரும் குற்றச்சாட்டுக்கு பதில் அளிக்கும் விதத்திலேயே ஜனாதிபதி இப்படித் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று புத்திஜீவிகளைச் சந்தித்து ஜனாதிபதி கலந்துரையாடினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டு மக்களைப் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு எம்மிடம் உள்ளது. மனித உரிமைகளைப் பாதுகாக்க நான் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றேன். நாட்டைக் காட்டிக்கொடுக்க முயற்சிப்போருக்கு ஒரு போதும் இடமளிக்கப்படமாட்டாது.

பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் நாட்டின் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுத்துச் செல்லப்படும்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணக வாழ்வின் ஒன்பதாம் வருட நீங்கா நினைவுகள்...

மண் மகிழ 11 . 06 . 1973



கண் நெகிழ 11 . 03 . 1998

### திருமதி ஜோய் றொமின் அன்ரனீற்றா

ஒன்பது ஆண்டுகள் கடந்தாலும்
ஒளி மிகுந்த உன் வதனம்
ஒரு நாளும் எமைவிட்டு நீங்காது
ஓயாது உனக்காய் செபிக்கின்றோம்
ஒரு நாளில் நாமெல்லாம் சந்திப்போம்.

செபங்களுடன்....
குடும்பத்தினர்.

*36/1, புனித ஆசீர்வாதப்பர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (58690)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### வீரசிங்கம் இரத்தினசிங்கம்

(ரட்ணா) - (ஒப்பந்தகாரர்)

அன்னையின் மடியில் 25.07.1973

அரக்கனின் பிடியில் 26.01.2007

கருவிழி வழிந்த கண்ணீர் துளிகள்
காய்ந்து விட்ட போதிலும்
இதயத்தில் எழுதி வைத்த நினைவுகள்
இளமையுடன் இருக்கின்றன.

கடந்த 26.01.2007 அன்று அகாலமரணமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (11.03.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, மக்கள்,
மாமன், மாமி, மைத்துனர்மார்,
மைத்துனிமார்.

*கட்டுடை,*
*மானிப்பாய்.* (58519)

## அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் : 1927.10.18
மறைவு : 2007.02.09

கடந்த 09.02.2007 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த

அமரர்

### நடராசா நேசம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (11.03.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சூழானை வைரவர் ஒழுங்கை,*
*சுன்னாகம்.* (58693)

க. நடராசா குடும்பம்.

## மரண அறிவித்தல்

### திருமதி மருதடியான் அன்னப்பிள்ளை



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் புங்கன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மருதடியான் அன்னப்பிள்ளை நேற்று (10.03.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மருதடியானின் அன்பு மனைவியும் முருகேசு - சேதுப்பிள்ளை தம்பதியரின் மகளும் வேலுப்பிள்ளை - பொன்னாச்சி தம்பதியரின் மருமகளும் மகாதேவன், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் சிவகாமசுந்தரி, காலஞ்சென்ற நாகராசா (ஓய்வுபெற்ற ரெலிக்கொம் ஊழியர்) மற்றும் மகேஸ்வரன், வாலாம்பிகை, ஞானாம்பிகை, மனோகரன், கனகாம்பிகை ஆகியோரின் தாயும், தனலெட்சுமி, இந்திராதேவி, தில்லைநாதன் (ஓய்வு பெற்ற ரெலிக்கொம் ஊழியர்), மங்கையர்க்கரசி, இராஜேஸ்வரி, சாந்தகுமார், மகேஸ்வரன், உதயகுமாரி, கனகரெட்ணம் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

80, புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 9860690. (58722)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


SRI LANKA RED CROSS SOCIETY

## WANTED TEACHERS TO TEACH ENGLISH

*We want part time teachers to teach English Grammar, Reading, Writing, Oral, Listening, Communication, Translation, Business correspondence, Presentation of Project work, Introduction to Literature, etc. Please apply with the Curriculum vitae before 20.03.2007*

***Branch Executive Officer, SLRCS, Jaffna Branch, 73, Kandy Road, Jaffna***

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, கதைக்கப் பயில மற்றும் பட்டப்படிப்புவரை வினாவிடை, இலக்கண வகுப்புகள்
By: விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.

## மணமகள் தேவை

யாழ்.கிறிஸ்தவ (Non -R.C) கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனத்தில் அலுவலராகப் பணிபுரியும் 33 வயது மணமகனுக்கு படித்த பண்பான மணமகள் தேவை. தொ.பே. 0776184386 (58660)

## மணமகள் தேவை

ஆயுர்வேத வைத்தியம் செய்து கொண்டிருக்கும் சதய நட்சத்திர செவ்வாய்க்குற்றமுள்ள விவாகரத்துப் பெற்ற மேலதிக நிரந்த வருமானமாக ரூபா 5000 பெறும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொழில் இல்லாதோரும், விதவைகளும் ஜாதகக் குறிப்பு முழு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். பிறைவேற் வைத்தியம் (ஆயுர்வேதம்) செய்வோரும் விரும்பத்தக்கது. தொடர்பு - விளம்பர இல. 2954 மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 34 வயது, அச்சுவினி 3ஆம் பாதம், கிரகபாவம் 34½, 10 இல் செவ்வாய், காப்புறுதி நிறுவனம் ஒன்றில் கடமைபுரியும் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
தொ.பே. 0776184386 (58630)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, நந்தாவில் அம்மன் வீதி ஆரம்பத்தில் 3பரப்பு காணியில் கடைக் கட்டடத்துடன், வளவு வருமானத்துடனும் சற்சதுரக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- தொ.பே. 0773151530
(இரவு 7 மணிக்குப் பின் 0212225738) (C52169)

## வீடு வாடகைக்கு

கோவில் வீதி, நல்லூரடியில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு (அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தவை) வாடகைக்குண்டு.
தொடர்பு : 0775122999
0212226282 (58719)


## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் ச. பரமேஸ்வரநாதன் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி ச.பரமேஸ்வரி

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை. (58712)


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ISSZU 250 ELF Vanவிற்பனைக்குண்டு. (இரட்டைப் பாவனை)
தொடர்புகளுக்கு:
சிவலோகநாதன் அன் கோ.
96 (6), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 3347

## தவறிவிட்டது

இரத்தினம் ஜெகநாதன் ஆகிய எனது சாரதி அனுமதிப் பத்திரம் உரும்பிராய் சந்திக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் இரு வாரங்களுக்கு முன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும்.

## விற்பனைக்கு

கட்டில்கள், மெத்தைகள், மேசைகள், கதிரைகள் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:
352, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

1) 5 K.W டீசல் ஜெனரேற்றர் 2) குளிரூட்டி (A.C)
3) ஒரே தடைவையில் 9CD பதிவு செய்யக் கூடிய மல்ரி (Multy) றைற்றர்
4) ஒரே தடவையில் 5 கசட் பதிவு செய்யக் கூடிய றெக்கோடர்
5) CD பிறின்டர் 6) VHS டெக் என்பன விற்பனைக்குண்டு.
இல. 141B, பலாலி வீதி, (தபால் பெட்டிச் சந்தி),
திருநெல்வேலி. 021 222 4257


## முதலாம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம் 22 - 06 - 1945



மறைவு 21 - 02 - 2006

### அமரர் க. பத்மநாதன்

(முன்னாள் அதிபர், யா/புத்தூர் பஞ்ஞசீக வித்தியாலயம்,புத்தூர்)

*திதி: 12.03.2007 (அட்டமி, அபரபக்கம்)*

அன்போடும் பண்போடும் அறிவோடும் வளர்த்த
எனது அருமை அப்பாவே!
நீங்கள் அருகில் இருந்து எமக்கு நல்வாழ்வு தந்தீர்கள்
இப்போது மறைந்திருந்து உங்கள் ஆசியுடன் எங்களை
வாழ வைப்பீர்கள்.
பாசமிகு அப்பாவை என்றும் மறவோம்.
எங்களை கண் இமைபோல் காத்த அப்பாவே.

அன்னாரின் முதலாம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு நாளை (12.03.2007) எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*பிள்ளையார் கோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.* (58645) - குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 13 - 07 - 1934



இறப்பு 22 - 03 - 2006

### திருமதி ஆறுமுகத்தான் இலட்சுமி

அன்போடும் அறிவோடும்
எம்மை வளர்த்த தாயே
ஆண்டுகள் பல சென்றாலும்
உனை நாம் மறவோம்

இன்று (11.03.2007) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது தெய்வத்தின் ஓராண்டு நினைவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*கைதடி கிழக்கு,*
*கலைநகர்.* (58650)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 07 . 1931



மறைவு 08 . 03 . 2006

### அமரர் தில்லையம்பலம் சண்முகநாதன்

(செல்வநாதன் ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளரும் சாயி தொலைத் தொடர்பு சேவையின் ஸ்தாபகரும்)

(திதி: ஸப்தமி 11.03.2007)

அன்பின் பிறப்பிடமாக இருந்து எங்களை
நல்வழி நடத்திய அப்பாவே!
எங்களைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் எங்கள்
இதயத்தில் நீங்கா நினைவுகளுடன் வாழ்கின்றீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*84, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர் சந்தை, யாழ்ப்பாணம்.* (58687)

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## வடக்கு – கிழக்கு பிரிப்பை சட்டபூர்வமானதாக்கும் செயற்பாடு

வடக்கையும், கிழக்கையும் உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய பிரித்த மஹிந்தவின் அரசு, அந்தப் பிரிப்புக்கு சட்டரீதியான வலுவைக் கொடுப்பதற்கான சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றது. அதற்கான உரிய சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நடவடிக்கை மூலம் மஹிந்த அரசு இரண்டு விடயங்களை வெளிப்படுத்தியிருக்கிறது.

ஒன்று – வடக்கையும், கிழக்கையும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்காலிக ஏற்பாடு என்ற வகையில் இணைத்து வைத்திருந்த முந்திய அரசுகளின் நிலைப்பாட்டை முற்றாக மாற்றியமைத்து நிராகரிக்க அது தீர்மானித்துவிட்டது என்பது.

அடுத்தது – வடக்கு, கிழக்கு பிரிப்பு என்பது சட்டச் சிக்கலுக்கோ ஐயத்துக்கோ இடமின்றி உறுதியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் அரசு மிகத் திடமாக உள்ளது என்பது.

வடக்கும், கிழக்கும் ஈழத் தமிழர்களின் பூர்வீகத் தாயகம். அதனைக் கூறுபோட முயல்வது, அரசியல் ரீதியாக அவர்களைப் பலவீனப்படுத்தி அவர்களின் ஐக்கியத்தையும் தனித்துவப் பண்புகளையும், அவர்களின் தனியுரிமைத் தேசக் கட்டமைப்பையும் சிதறடிக்கும் – சிதைவுறச் செய்யும் – கபட உள்நோக்கம் கொண்ட எத்தனமாகும்.

ஐக்கியப்பட்ட – கூறுபோட முடியாத – தமிழர் தாயகம் என்ற தமிழர்களின் மாற்ற முடியாத நிலைப்பாடு குறித்து தமிழர் தரப்பு ஐக்கியப்பட்ட நிலை யில் தமது முடிவை ஏககுரலில் வெளிப்படுத்தியது 1985 நடுப்பகுதியில் திம்புப் பேச்சுவார்த்தையிலாகும்.

திம்புக் கோட்பாடுகள் என வகைப்படுத்தப்படும் தமிழர்களின் நான்கு மாற்றமுடியாத தீர்மானங்களில் இது முக்கியமானது. திம்புப் பேச்சுகளின் போது தமிழர்களின் இந்த நிலைப்பாட்டை கொழும்பு அரசு ஏற்க மறுத்தது.

ஆனால், சுமார் இரண்டு ஆண்டுகள் கழித்து வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பூர்வீகத் தாயகம் – அவர்களின் வரலாற்று ரீதியான வாழிடம் – என்பதை இலங்கை அரசுத் தலைவரே இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலம் எழுத்தில் ஒப்புக்கொண்டு கைச்சாத்திட வேண்டியதாயிற்று.

ஆனால் அப்போதும் கூட வடக்கு – கிழக்கு இணைப்பை சட்டத்தின் மூலம் செய்யாமல் தமது ஒரு பிரகடனம் மூலம் மேற்கொண்டார், அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா.

அப்போது முதல் கடந்த ஆண்டுவரை சுமார் 18, 19 ஆண்டுகள் நாட்டில் ஆட்சியில் இருந்த அனைத்து ஜனாதிபதிகளினாலும் இந்த இணைப்பு வருடாவருடம் உறுதிப்படுத்தப்பட்டு, அது தொடர்பான பிரகடனம் மூலம் அது நீடிக்கப்பட்டும் வந்தது.

ஆனால், கடந்த ஆண்டில் மேற்படி வடக்கு, கிழக்கை இணைப்பதற்கான முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அரசியல் தீர்மானத்தில் தலையிட்ட உயர் நீதிமன்றம் அந்த ஜனாதிபதியின் அவ்விவகாரம் சம்பந்தமான அரசியல் தீர்மானமும் அதுதொடர்பானபிரகடனமும் தவறானது என்று அறிவித்து வடக்கு – கிழக்கு இணைப்புக்குச் சாவு மணியடித்தது.

அரசியல் யதார்த்தங்களுக்கு அப்பால் சென்று இந்த நீதி வழங்கப்பட்ட முறைமை குறித்தும், அதற்குக் காட்டப்பட்ட காரணங்கள் குறித்தும் ஈழத் தமிழர்களுக்கு தாங்கமுடியாத மனவருத்தமும், எரிச்சலும், சீற்றமும் உண்டு.

ஆனால், சாதாரண சட்டமொன்றின் மூலம், வடக்கு – கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்த முடியும் என்பதையும் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் கோடிகாட்டத் தவறவில்லை.

அதாவது –

இவ்விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தங்களுக்கு நீதி செய்யவில்லையென தமிழர்கள் கருதினால், அவர்களின் பூர்வீகத் தாயகமான வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இணைந்திருக்க முடியாது, பிரிந்தே இருக்கவேண்டும் என உயர் நீதிமன்று தீர்ப்பளிக்கவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

வடக்கு – கிழக்கு இணைக்கப்பட்ட முறைமை தவறானது என்றே அது குறிப்பிட்டிருக்கின்றது. அது மட்டுமல்ல, அந்த இணைப்பை சட்டப்படி யான தாக – சட்ட முறைமையானதாக மேற்கொள்வதாயின் அதற்கு என்ன வழி என்பதையும் உயர்நீதிமன்றம் காட்டியது.

ஆனால், தான் அப்படி இணைப்பைச் சட்ட ரீதியானதாக்கமாட்டேன், பிரிப்பையேசட்டப்படியான தாக்குவேன் என்ற தனது பேரினவாத நிலைப்பாட்டை இப்போது நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரும் சட்ட வரைவின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கின்றார் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என்பதை உறுதிப்படுத்திய இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் சரத்தைதூக்கிக் குப்பைக்கூடையில் எறிவதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாகும் இது. இப்போது பிரிப்பை சட்ட வலிதுடையதாக்கும் வகையில் சட்டவரைவு நாடாளுமன்றுக்குக் கொண்டு வரப்படுகின்றது.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலம் இந்தியாவுக்குத் தான் கொடுத்த உறுதிமொழியை இந் நடவடிக்கை மூலம் மீறுகிறது கொழும்பு அரசு.

அந்த வகையில் இந்நடவடிக்கை புதுடில்லிக்கு இழுக்குத் தரும் செயற்பாடு. பிராந்தியத்தின் வல்லரசு எனக் கொள்ளப்படும் இந்தியாவை ஊதாசீனம் செய்வதோடு மட்டுமன்றி, அதற்குச் சவால் விடும் நடவடிக்கையாகவும் இச்செயல் அமைகிறது. அதே சமயம் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை புது டில்லிக்கு எடுத்துரைக்கும் செயற்பாடாக வும் இது அமைவதை புதுடில்லி உணர்ந்துகொள்ள வேண்டும்.

பிரதேச செயலர் பிரிவு தோறும் தெரிவு செய்யப்பட்ட

# தனியார் மருந்தகங்களுக்கு இவ்வாரம் மருந்து விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

குடாநாட்டில் இயங்கும் தனியார் மருந்தகங்களுக்கான மருந்து வகைகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

கப்பலில் இருந்து இப்போது இறக்கப்பட்டுவரும் இந்த மருந்து வகைகள் இன்று அல்லது நாளை யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் மருந்தகத்துக்கு எடுத்து வரப்படும்.

மருந்து வகைகள் தரம் பிரிக்கப்பட்டு ஓரிரு தினங்களில், குடாநாட்டில் உள்ள மருந்தகங்களுக்கு வழங்கப்படும்.

மருந்து விநியோகம் செய்வதற்கு பிரதேச செயலர்களால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள மருந்தங்களுக்கு மருந்து விநியோகிக்கப்படவிருக்கின்றது என்றும்-

அதன்பின்னர் அந்த மருந்தகங்கள் தொடர்பான விவரங்கள் வெளிவிடப்படும் எனவும்- யாழ்.மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-1)

## ஓகஸ்ட்டுக்குப் பின்னர் மின் கட்டண பற்றுச்சீட்டு கிட்டவில்லையாம்

நல்லூர்,மார்ச்11

கடந்த ஓகஸ்ட் மாதத்தின் பின் மின்சாரக் கட்டணம் குறித்த பற்றுச்சீட்டுக்கள் யாழ். நரப் பகுதி மக்களுக்கு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட நிலையில் கடந்த 8 மாதங்களாக மின் கட்டணம் குறித்த அறிவிப்புகள் கிடைக்காத நிலையில் -

8 மாதங்களுக்குமான மின் கட்டணமாக பெருந்தொகைப் பணத்தைத் தாங்கள் செலுத்த வேண்டிய நிலை ஏற்படலாம் என குடியிருப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (111)

## வைத்தியசாலைகளுக்கான மருந்துகள் வந்துசேர்ந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்து வகைகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

'இந்துருவலி' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள இந்த மருந்து வகைகள் இப்போது இறக்கப்பட்டு வருகின்றன.

முதலாவது காலாண்டுக்கான மருந்து வகைகளே எடுத்து வரப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

# வாகனத் தரிப்பிடங்களை அனுமதியின்றி நடத்தினால் கடும் நடவடிக்கை

## ஆணையாளர் அறிவுறுத்து

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அனுமதி பெறாது வாகனத் தரிப்பிடங்களை நடத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ இதனைத் தெரிவித்தார்.

தரிப்பிடங்களில் சைக்கிள் வண்டிகளுக்கு வித்தியாசமான கட்டணங்கள் அறவிடப்படு கின்றமை தொடர்பான முறைப் பாடு பற்றிக் கேட்கப்பட்ட பொழுதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

தனிப்பட்ட தரிப்பிடங்களை நடத்துவோர் சம்பந்தப்பட்ட காணி உரிமையாளராக இருக்க வேண்டும். அல்லாதவிடத்து உரிமையாளரின் சம்மதக் கடிதத்தைப் பெற்று மாநகரசபையில் அனுமதி பெறவேண்டும்.

அச்சடிக்கப்படும் சகல பற்றுச் சீட்டுகளுக்கும் மாநகர சபையில் இலச்சினையைப் பெற்றுக் கொள்வதுடன் 25 வீதத்தை வரியாகச் செலுத்தவேண்டும். நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மேல் கட்டணம்அறவிடப்படக்கூடாதென வும் அவர் மேலும் தெரி வித்தார்.

சில இடங்களில் துவிச்சக்கர வண்டி ஒன்றுக்கு 5 ரூபாவும், மற்றும் சில இடங்களில் 'ரிக் கெற்றில்' உள்ள தொகையிலும் பார்க்க ஒரு ரூபா அதிகமாகவும் பெறப்படுவதாகவும் மாநகர சபைக்குச் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

தரிப்பிடத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பெயர் விவரங்கள், அடையாள அட்டை இலக்கம் என்பன உறுதிப்படுத்தப்பட்டு மாநகர சபையில் சமர்ப்பிக்கப்படவேண்டும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (1-88)

### கிழக்கில் சாதாரணதர விசேட பரீட்சை ஆரம்பம்

கிழக்குப் பகுதியில் கடந்த ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தம் காரணமாக தடைப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விசேட பரீட்சை நேற்று அங்கு ஆரம்பமானது.

கிழக்கின் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பல மாணவர்கள்இப் பரீட்சைக்குத் தோற்றினர். (அ-12)

## தமிழர்களை அவலத்திற்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்காப் படைகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள மனித அவலம் தமிழீழ மக்களுடன் மட்டும் நின்றுவிடாது. அது பாரிய போருக்கு வழிவகுத்து வருவதாகவே கருதுகிறோம்.

மட்டக்களப்பில் படையினரின் ஷெல் தாக்குதல்கள், மற்றும் ஆக்கிரமிப்பு படை நடவடிக்கைகள் காரணமாக கடந்த சில நாள்களுக்குள் மட்டும் 15 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்து பாரிய மனித அவலத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களை அவலத்துக்குள் தள்ளும் ஸ்ரீலங்கா அரசாங்கம் அதற்குரிய விளைவினையும் சிறீலங்காவிலும் உணர நேரிடும்.

மட்டக்களப்பு புல்லுமலைப் பிரதேசம் நோக்கி ஸ்ரீலங்காப் படையினர் வெள்ளிக்கிழமை பிற்பகலிலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். திருகோணமலையிலும் விடுதலைப் புலிகளின் முகாம்களைக் கைப்பற்றியதாக ஸ்ரீலங்காப் படையினர் கூறுவது வெறும் பொய்ப்பிரசாரமாகும் - என்றார். (அ)

## புலிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாதிகள் எவரும் தமிழகத்துக்குள் நுழைந்து சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடாவண்ணமும், கடுமையான நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ வெடிபொருள்களோ அல்லது அவர்களுக்கு உதவி செய்பவர்களைத் தீவிரமாக கண்காணித்துக் கடுமையாக நடவடிக்கை மேற்கொள்ள அரசு காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளது.- இப்படி அவர்மேலும் தெரிவித்தார். (அ-1)

## மட்டக்களப்பிலிருந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந் தும் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் ஏழு விசேட அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர்; இருபதுக்கு மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர்.

இவர்கள் அனுராதபுரம் வைத்திய சாலையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு ள்ளனர்.

இதேவேளை -

இத் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 படையினரின் சடலங்களை செஞ்சிலுவை சர்வதேசக் குழுவிடம் ஒப்படைத்ததாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (அ-1)

## தமிழக மீனவரை இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தினால் தமிழனுடைய கை மீன்பிடித்துக்கொண்டு மாத்திரம் இருக்கும் என்று கருத வேண்டாம்'' என்று இம்மாதம் ஐந்தாம் திகதிய ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழக முதல்வர் தெரிவித்திருந்தார்.

இலங்கைக் கடற்படையினரின் தமிழக மீனவர் மீதான கொலைகள், தாக்குதல்கள், படகுகளைக் கவிழ்த்து அழித்தல் ஆகிய கொடூரச் செயல்கள் குறித்து ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் நாளை திங்கட்கிழமை மீன்பிடித்துறை அமைச்சர் ஜே.பி.பி. சாமி தலைமையில் சென்னையில் உள்ள இலங்கை பிரதித் தூதரகத்தின் முன்னால் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இந்தோனேஷியர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யர்கள் இருவரும் வெள்ளியன்று யோர்த் நகருக்கு விமானத்தில் கூட்டிச்செல்லப்பட்டனர்.

அங்கு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படும் பட்சத்தில் 20 வருடம் வரையான சிறைத்தண்டனைக்கு ஆளாவர் என்று ஆஸ்திரேலியப் பொலிஸார் தெரிவித்தனர்.

அகதி அந்தஸ்து கோரிச் சென்ற இலங்கைத் தமிழர்கள் 83பேரும் இப்போது ஐ.நா. மற்றும் ஆஸ்திரேலிய அதிகாரிகளால் கிறிஸ்மஸ் தீவில் வைத்துத் தனித்தனியாக விசாரிக்கப்படுகின்றனர். விசாரணைகள் பூர்த்தியாவதற்கு சில வாரங்கள் செல்லலாம் என்று ஆஸ்திரேலிய குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அகதி அந்தஸ்து கோரிச்சென்ற அனைவரும் ஆண்கள் என்றும், அவர்களில் 17 வயது தொடக்கம் 30 வயதுடையோர் உள்ளனர் என்றும் அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (அ)

## சரணாலயத் தாக்குதல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் எட்டுப்பேரையும் காணவில்லை என்று அவர்கள் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அனுராதபுரம் பகுதி இராணுவக் கொமாண்டர் லெப்.கேணல் ஜெயந்த சுரவீர, மேஜர் எவ்.ஏ. ஜெயரத்னா, கோப்ரல் கபில குமார, சிப்பாய் சுரங்க மற்றும் வனவிலங்குப் பிரிவின் பொறுப்பதிகாரி வசந்த புஷ்பானந்த, காவலர்களான டி.விதாரணஹெனும் ஜெயவர்த்தனா, பிரதீப் நவரத்தின ஆகியோரின் சடலங்கள் இகிரியகொல குளத்துக்கு 25 கிலோமீற்றர் தொலைவில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எட்டுப்பேரின் சடலங்களும் பிரேத பரிசோதனை செய்வதற்காக அருகில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிக்கு நேற்று எடுத்துச்செல்லப்பட்டதாக இராணுவத் தரப்பில் அறிவிக்கப்பட்டது. (அ)

குடாநாட்டின் குட்டிச் செய்திகள் – யாழ்ப்பாணம்

## சடலம் இனங்காணப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 11

ஏழாலை, மயிலங்காட்டுப் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் கடந்த 4ஆம் திகதி மீட்கப்பட்ட இளைஞனின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

சுன்னாகம் ரயில் நிலையத்தடியைச் சேர்ந்த துரைராஜா சசிகரன் (வயது-26) என்பவரின் சடலம் என அடையாளம் காணப்பட்டது.

சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கும்படி மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## கல்வியங்காட்டில் திருட்டு; பெண்ணுக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 11

கல்வியங்காடு வீரபத்திரர் கோயிலடியில் உள்ள வீடு ஒன்றில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட கொள்ளையர்களின் வாள் வெட்டுக்கு இலக்காகிப் பெண் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜெ.இந்திராவதி (வயது-44) என்பவரே தலைப்பகுதியில் காயமடைந்து யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பிரஸ்தாப பெண்ணின் வீட்டிற்கு நேற்று முன்தினம் இரவு சென்ற கொள்ளையர் குழு ஒன்று வீட்டில் இருந்த பொருள்களைத் திருடிய பின்னர் பெண்ணின் கழுத்தில் இருந்த சங்கிலியைத் தரும்படி கேட்டதாகவும், அப்போது அதனை ஜன்னல் வழியாக வெளியே வீச முற்பட்டபோதே வாளால் வெட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-1-4)

## நீர்வேலி அறநெறிப் பாடசாலை ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 11

நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையின் 5ஆம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையில் இடம் பெறவிருக்கின்றன. (1)

## பண்டிதர், பாலபண்டிதர் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 11

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திக் கீழைத்தேயக் கல்லூரியால் நடத்தப்பட்ட பண்டிதர், பாலபண்டிதர் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றில் சித்தி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**பண்டிதர்**

செல்வி தவராணி சுப்பிரமணியம்

**பாலபண்டிதர்**

பொன்னம்பலம் சுகந்தன், செல்வி கவிதா ஏகாம்பரநாதன், செல்வி சியாமினி இராசரத்தினம், நவரத்தினம் குகபரன், செல்வி அநுஷியா செந்தில்நாதன்

## தீவக அதிபர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்11

தீவகக் கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

## நாளை

மாசி - 28
திங்கட்கிழமை
12.03.2007
திதி: அட்டமி
மாலை : 05.46
நட்சத்திரம்: கேட்டை
முற்பகல் : 11.01
சுபநேரம் : 12.22 - 01.52
ராகுகாலம் : 07.52 - 09.22

## VACANCY FOR MBBS QUALIFIED MEDICAL OFFICER

Applications are invited with consent letters from those in appropriate services and from those retired from services and also from candidates with MBBS qualifications to work in Karainagar Peripheral Hospital.

Karainagar Welfare Society - UK is prepared to pay an additional incentive of Rs.10,000/= (Rupees Ten Thousand only) per month in addition to the salary payable in accordance with the P.A. Circulars and regulations as prescribed in the Establishment Code.

Application should reach the Secretary, Abiviruththi Sabai, New Road, Karainagar on or before 25.03.2007

---

### விஞ்ஞான பீடம்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## அறிவித்தல்

**விஞ்ஞானத்தில் முதலாம் / இரண்டாம் / மூன்றாம் தேர்வு (முதலாம் / இரண்டாம் அரையாண்டு) 2006 மீள்பரீட்சை**

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினது மேற்குறிப்பிட்ட மீள் பரீட்சைகள் யாவும் (இரு அரையாண்டு பரீட்சைகள்) 03.04.2007 தொடக்கம் 05.05.2007 வரையிலான காலப் பகுதியில் நடைபெறவுள்ளன. மீள்பரீட்சார்த்திகள் தமது பரீட்சை அனுமதி விண்ணப்பப் படிவத்தினை உரிய கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுடன் 23.03.2007 ஆம் திகதிக்கு முன்னதாக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சை அனுமதி விண்ணப்பப்படிவங்களை விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தினை மேற்கண்ட திகதிக்கு முன் சமர்ப்பிக்க முடியாதவர்கள் தொலைநகலில் (Fax) ஊடாக (தொலைநகல் இல.021 222 2685) கீழ்க் காணும் விவரங்களை சமர்ப்பிக்குமாறும் மீள்பரீட்சைக்கான உரிய கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை பரீட்சை எடுப்பதற்கு முன் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1.முழுப்பெயர்
2.பதிவிலக்கம்
3.சுட்டெண்
4.விண்ணப்பிக்கும் பாட அலகுகள் (Course Units)
5.தேசிய அடையாள அட்டை இலக்கம்

மேலதிக விவரங்களுக்கு விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி இல. 0212222685)

(சி-52183) **பதிவாளர்.**

---

## மரண அறிவித்தல்கள்

### செல்வராசா பாலசுந்தரம் (ஆசாரி)



வண்ணார்பண்ணை, கேசாவில் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் காளிகோயிலடி, களபூமி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா பாலசுந்தரம் 09.03.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் மணி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி- இராசம்மா தம்பதியரின் மருமகனும் , மங்களாதேவியின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரன், தவமலர், நேசமலர்(வவுனியா),சுமலதா (இராமநாதன் நுண் கலைப்பீடம்-சங்கீதம் இறுதிவருடமாணவி),தர்ஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும்,சிறிமதி, அமரர் மகேந்திரராசா ஆகியோரின் அன்புமாமனும், பாலசுப்பிரமணியம், சாந்தகுமார், சரஸ்வதி, தெட்சணாமூர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் பிருந்தாபன், பானுஜன், ஷாலினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தில்லை மயானத்தில் தகனஞ்செய்யப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி, களபூமி,காரைநகர். (58738) தகவல்: மனைவி,பிள்ளைகள்.

### செல்வி மயூரா முருகையா
**(யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ முதலாம்வருடம்)**



கூட்டுறவு வீதி, அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த செல்வி மயூரா முருகையா நேற்றுமுன் தினம் (09.03.2007) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா மற்றும் உருக்குமணி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் வினோதா, மயூரன் (U.K.), விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லத்துரை, மங்கையர்க்கரசி, நாகம்மா, அம்பலவாணர் ஆகியோரின் பேர்த்தியும் திருமதி புஸ்பராணி தர்மகுலசிங்கம் (சுவிஸ்), திருமதி உமாபதி யோகேஸ்வரன் (ஜேர்மனி), திருமதி மனோரஞ்சினி கணேஸ், திருமதி விஜயராணி கஜநாதன் (அமெரிக்கா), திருமதி ஜெயராணி கோணேஸ்வரன் (சுவிஸ்), மகாலிங்கம் பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும் தவரஞ்சன் மாலினி (ஜேர்மனி), சிவலிங்கம் தனலட்சுமி, தியாகராசா அன்னலட்சுமி ஆகியோரின் மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(10.03.2007) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூட்டுறவு வீதி, அளவெட்டி கிழக்கு. (58731) தகவல்: குடும்பத்தினர்.

---

## புலிகளுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருசிலர் அரசைத் தாழ்வுபடுத்தி அசௌகரியங்களுக்கு உள்ளாக்க முயல்கின்றனர். அந்தச் சக்திகளை முறியடித்து நாட்டை முன்னோக்கி இட்டுச்செல்வோம்.

காணாமற்போதல் மற்றும் கைதுசெய்யப்படும் நபர்களின் மனித உரிமை மீறப்படுவதாக அரசின்மேல் சிலர் மேற்கொள்ளும் குற்றச்சாட்டுக்கள் அவதூறானவை.

தோல்வியடைந்த அரசியல்வாதிகளும் அரசியலில் ஓய்வுபெற்ற சிலரும் மீண்டும் துரிதமாக ஆட்சிக்குவரும் நோக்கில், இவ்வாறான குற்றச்சாட்டுக்களை அரசுமீது முன்வைக்கின்றனர் - என்றார் ஜனாதிபதி.

இச்சந்திப்பில் முப்படைத் தளபதிகள், பாதுகாப்புச் செயலாளர், முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரி சூலாசெனவிரட்ண ஆகியோரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (அ-12)

---

### விற்பனைக்கு

P4, P3 Computer
NPGI -XXXX
தொடர் இலக்கமுடைய
HONDA LANCER 90
என்பன விற்பனைக் குண்டு.
தொடர்பு:
214C, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

### சித்திரம்

(Theory & practical)
A/L ,Gr. 11 &10
Mr.S.பிரசாந்தன்
B.F.A.(Hons)

* A/L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் நடைபெறுகின்றன.
* Gr.1முதல் 11வரை
* English med. 6,7,8

SHAMROCK
ஐச்சபோர் டை., யாழ்.

### கார் விற்பனைக்கு

HY-XXXX தொடரிலக்க NISAN (BLUE BIRO) கார் விற்பனைக்குண்டு.
0773866250, 0777563781

### வெற்றித்தேர்வு -4

திரு.கணேசலிங்கம் அவர்களின் தரம்-5
வெற்றித்தேர்வு - 4
நாளை பெற்றுக்கொள்ள முடியும்.

தரம்-4 முதல் O/L முதலாவது பரீட்சை வினாத்தாள்கள் பெறலாம்.

**கிடைக்கும் புத்தகசாலைகள்**

| | |
|---|---|
| மொடேன் | நெல்லியடி. |
| துர்க்கா | சுன்னாகம். |
| தாவடிச் சந்தி கொமினிகேசன் | |
| பூபாலசிங்கம் | யாழ்.நகர். |
| சயன்ஸ் அக்கடமி | நல்லூர். |
| நியூமற்ஸ் அக்கடமி | சாவகச்சேரி. |

பாடசாலைகளின் தொடர்பிற்கு 0773126807

### ஆத்ம ஜோகக் கலை

(வாழ்வை வளமூட்டும் விஞ்ஞானக் கலை)

வாழ்வின் சகல பிரச்சினைகளிலும் இருந்தும் இக்காக இயந்திர யுகத்திலிருந்தும் நம்மை நாமே அமைதிப்படுத்தும், வாழ்வில் வெற்றிகளைக் குவிக்கும் அபூர்வ கலை

விண்ணப்படிவங்கள் 20.03.2007 வரை இலவசமாக வழங்கப்படும்.

'ஆத்ம ஜோக வட்டத்தில் இணையும் வேலைவாய்ப்பற்ற அங்கத்தவர்களுக்கு வேலைவாய்ப்புகளும் வழங்கப்படும்.'

**ஆத்ம ஜோக நிலையம்**
**142, இராசாவின் தோட்டம்,**
**யாழ்ப்பாணம்.**

---

## அறிவித்தல்

### விஞ்ஞான பீடம்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### 2005/2006 கல்வியாண்டு
### புதிய அனுமதிகள்

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையின் அடிப்படையில் 2005/2006 கல்வியாண்டிற்கு விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 22.03.2007 வியாழக்கிழமை ஆரம்பமாகும். அன்று மு.ப. 9.30 மணிக்கு பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் புதிய மாணவர் வரவேற்பும், அறிமுக நிகழ்வுகளும் இடம்பெறும்.

அடிப்படைக் கற்கை நெறிகளாகிய கணனிப் பாடநெறியும், ஆங்கிலப் பாடநெறியும் 23.03.2007 தொடக்கம் 08.04.2007 வரை நடத்தப்படும். யாழ்.பல்கலைக்கழகத்தில் 2005/2006 கல்வியாண்டிற்கு தங்களைப் பதிவு செய்த மாணவர்கள் யாவரும் இந்த நிகழ்ச்சிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விரிவுரைகள் 09.04.2007 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

**பதிவாளர்.**
யாழ்.பல்கலைக்கழகம்.
09.03.2007

(சி-52182)

---

## மரண அறிவித்தல்கள்

### சங்கரப்பிள்ளை இரத்தினம்
**(க.கு. சங்கரப்பிள்ளை வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்)**

காரைநகர், மருதடிப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலுப்பிள்ளை சங்கரப்பிள்ளை இரத்தினம் (க.கு. சங்கரப்பிள்ளை வர்த்தக ஸ்தாபன உரிமையாளரும், பிரபல வர்த்தகர், யாழ்ப்பாணம்) 09.03.2007 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும் சரோஜினிதேவி, தனலட்சுமி, மகேஸ்வரி, கமலாதேவி (கனடா), நகுலாதேவி (கனடா), விக்கினேஸ்வரன் (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற Dr.செல்வரட்ணம் (மனோவைத்திய நிபுணர்), கெங்காதரன் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்), சிவபாதவிருதையர் (ஓய்வு பெற்ற கணித ஆசிரியர்), இராஜேந்திரம் (கனடா), அமிர்தலிங்கம் (கனடா), அனுசா (கனடா), ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சிவகாமிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான உறுவான்வலை நாகமுத்து-அமராவதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரம், இலட்சுமி, கணபதிப்பிள்ளை, ஆறுமுகம் பிள்ளை ஆகியோரின் அன்புச் கோதரரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நடராஜா, மற்றும் நவரட்ணம், சுந்தரலிங்கம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும். சந்திரிகா, சந்திரலதா, சிவபாலன், சிவகௌரி, சிவகாந்தன், கிருஸ்ணவேணி, நிஷாந்தன், கஜப்பிரியன், ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மகிந்த மலர்ச்சாலையில் 12.03.2007 திங்கட்கிழமை முற்பகல் 9மணியளவில் நடைபெற்று, கல்கிசை பொதுமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதடிப்பிள்ளையார் கோவில் அருகாமை, சம்பந்தர் கண்டி, காரைநகர். (58727) தகவல்: இ.நாகம்மா (மனைவி).

### தவவிநாயகம் உருத்திரகுமார் (உருத்திரன்)



யாழ்ப்பாணம்,அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் இந்தியா, 46,சபாபதி வீதி, உள்ளகரம் சென்னையை வதிவிடமாகவும் கொண்ட உருத்திரகுமார் 03.03.2007 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிராமத் தலைமைக்காரர் அமரர் செல்லத்துரை தவவிநாயகம் மற்றும் கிருஸ்ணாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும் திருமதி கஜவல்லியின் (இந்தியா) அன்புக் கணவரும் ஸ்ரீதேவி, சம்பத்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சச்சிதானந்தம்(இந்தியா), காலஞ்சென்ற திருமதி நடேஸ்வரி ஆகியோரின் மருமகனும் கிருபாலினி(இந்தியா), சந்திரகுமார்(பிரான்ஸ், குமார் சொப்), சூரியகுமார்(லண்டன், சூரியா யுவலரி), தவபாலினி(பிரான்ஸ் -கே.ரி.சி. யுவலரி), ஜெயபாலினி (லண்டன், ரோயல் யுவலரி), குணபாலினி (பிரான்ஸ்), சத்தியபாலினி(பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் இந்திரஜித் (இந்தியா), தயாநாயகி(பிரான்ஸ்), பரமேஸ்வரி (லண்டன்), சிவநேசராஜா (பிரான்ஸ்), ரவீந்திரன்(லண்டன்), ஜெயசீலன்(பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ் Fish O Fish), பவானி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் சிறிதரனின் (லண்டன்)சகலனும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் திருமதி இராசம்மா, நடேசபிள்ளை, திருமதி மங்கையர்க்கரசி ஆகியோரின் பெறாமகனும் ஞானசம்பந்தன், திருமதி தையல்நாயகி, காலஞ்சென்ற இரத்தினசபாபதி மற்றும் திருமதி சிவயோகலெட்சுமியின் மருமகனும் திருமதி யுகதாம்பாளின் பெறாமகனும் ரகுநாதனின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.03.2007) ஞாயிற்றுக்கிழமை சென்னையில் உள்ள அவரதுஇல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சென்னை பெசன் நகர் மின் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு இல.: 009144 22423202 தகவல்: குடும்பத்தினர்.
tckumar@Free.Fr , abarajith@gmail.com (58728)

### இராசன் இராஜரத்தினம் (கிஷிங்கர்)
**(ஓய்வுபெற்ற லிகிதர், கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்)**



அல்வாய், மனோகரா, ராஜகிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசன் இராஜரத்தினம் 09.03.2007 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிளானை கந்தர் இராசன், இராசன் தங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கிருஷ்னேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான க.பொன்னையா பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் மு.கிருஷ்ணகுமாரி (பொது முகாமைத்துவ உதவியாளர்,பிரதேச செயலகம் கரவெட்டி), ராஜன்(பிரதம கணக்காளர், Market makers P.V.T Colombo -11 Friends Marketing P.V.T. Colombo-11), ரஞ்சன், ரங்கன், மேனகா ஆகியோரின் அன்புத் தந்தையும் வே.முருகதாஸ் (பொலிஸ் திணைக்களம், சீனன்குடா, திருகோணமலை), கிரிஜா ஆகியோரின் அன்பு மாமனும் ராஜஷியானின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.03.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்வாய் பங்குவேம்படி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராஜகிரி மனோகரா,அல்வாய். தகவல்: குடும்பத்தினர். (58732)

### திருமதி இராமநாதபிள்ளை மகேஸ்வரி



தாளையடி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மயிலுவீதி, ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதபிள்ளை மகேஸ்வரி நேற்று (10.03.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதபிள்ளையின் அன்பு மனைவியும் கமலலோசனா(கிளி), நாகேஸ்வரன், நடேஸ்வரன்(ராசன்-ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் கமலாதேவி, கலா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் சிவசோதிப்பிள்ளை,மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மயிலுவீதி, ஆறுகால்மடம். தகவல்: கிளி(மகள்), பிரிந்தன் (பேரன்). (58729)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.